


**17. 12. 2025**

## தலைப்புச் செய்திகள்

**1.** நாட்டில் மக்கள் நல திட்டங்களை விரைந்து பெறும் வகையில் பொது உள்கட்டமைப்புகள், டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

**2.** குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வேலூர் ஸ்ரீபுரம் பொற்கோவிலில் 5 கோடி ரூபாய் மதிப்பிலான தியான மண்டபத்தை இன்று திறந்துவைத்தார்.

**3.** விமானங்களில் இணையதள வசதியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் அலையாத்தி காடுகளின் பரப்பளவு இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

5. இந்திய தென்னாப்பிரிக்க அணிகளுக்கிடையேயான 4ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி லக்னோவில் இன்று இரவு நடைபெறுகிறது.

## இனி விரிவான செய்திகள்

***************

**பிரதமர்**

ஆப்பிரிக்க நாடான எத்தியோப்பியாவில் இந்திய நிறுவனங்கள் அதிக அளவில் முதலீடு செய்து வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

எத்தியோப்பிய நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய அவர், பல்வேறு துறைகளில் 5 பில்லியன் டாலர் அளவிற்கு முதலீடு செய்ததன் மூலம் 75 ஆயிரம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதை எடுத்துரைத்தார்.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் 150 நாடுகளுக்கு தடுப்பு மருந்துகளை இந்தியா அனுப்பியதை சுட்டிக்காட்டிய பிரதமர் நான்கு மில்லியன் தடுப்பு மருந்துகள் எத்தியோப்பியாவிற்கு விநியோகிக்கப்பட்டதாக கூறினார்.

இந்திய மக்கள் அரசின் நல திட்ட சேவைகளை விரைந்து பெறும் வகையில் பொது உள்கட்டமைப்புகள், டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதை பிரதமர் எடுத்துரைத்தார்.

இந்தியாவின் தேசிய பாடலான வந்தேமாதரமும் எத்தியோப்பியாவின் தேசிய கீதமும் தாய் நாட்டின் பெருமையை எடுத்துரைப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே நம் முன்னோர்கள் கடல்வழி இணைப்பை இரு நாடுகளுக்கிடையே ஏற்படுத்தியதை பிரதமர் நினைவு கூர்ந்தார்.

அடீஸ், டோலரா துறைமுகங்கள் வர்த்தக மையங்களாக மட்டுமன்றி நாகரீகத்தின் பாலமாக திகழ்ந்ததை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக தமக்கு வழங்கப்பட்ட எத்தியோப்பியா நாட்டின் மிக உயரிய விருதை 140 கோடி இந்திய மக்களுக்கு சமர்ப்பிப்பதாக பிரதமர் கூறினார்.

பிரதமருக்கு விருது வழங்கப்பட்டமைக்கு மத்திய அமைச்சர்கள் திரு.அமித்ஷா, திரு.ஜே.பி.நட்டா, உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

3 நாடுகள் பயணத்தின் இறுதிகட்டமாக பிரதமர் இன்றுமாலை ஓமன் செல்கிறார்.

***************

**குடியரசு தலைவர்**

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வேலூர் மாவட்டம் ஸ்ரீபுரம் பொற்கோவிலில் இன்று சுவாமி தரிசனம் மேற்கொண்டார்.

முன்னதாக வேலூர் வந்தடைந்த குடியரசு தலைவரை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன்,

தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி

மாநில அமைச்சர்கள் திரு.துரைமுருகன், திரு.காந்தி ஆகியோர் வரவேற்றனர்.

கோவில் நிர்வாகம் சார்பில் குடியரசு தலைவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

கோவில் வளாகத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட தியான மண்டபத்தை திறந்துவைத்த குடியரசு தலைவர் மரக்கன்றையும் நட்டுவைத்தார்.

***************

**ஜோதிர் ஆதித்ய சிந்தியா**

விமானங்களில் இணையதள வசதி வழங்குவதற்கான நடவடிக்கைகளில் மத்திய அரசு ஈடுபட்டு வருவதாக

தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் தொலைபேசி அலைப்புகளுக்கான கட்டணங்கள் 97 சதவிகிதம் குறைந்துள்ளதாக கூறினார்.

2014ஆம் ஆண்டு ஒரு நிமிடத்திற்கான கட்டணம் 50 காசுகள் என்றிருந்த நிலையில் தற்போது இக்கட்டணம் **0.03** காசுகள் என்ற அளவிற்கு உள்ளதை சுட்டிக்காட்டினார்.

கடந்த 5 ஆண்டுகளில் தொலை தொடர்பு துறையில் இந்தியாவின் ஏற்றுமதி 72 சதவிகிதம் அளவிற்கு உயர்ந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

***************

**மக்களவை - கிஷன்ரெட்டி**

நிலக்கரி உற்பத்தியில் இந்தியா உலக அளவில் 2ஆவது பெரிய நாடாக திகழ்கிறது என மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு.கிஷன்ரெட்டி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதில் அளித்து பேசிய அவர் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் கடந்த 10 ஆண்டுகளில் நிலக்கரி துறையில் பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதை எடுத்துரைத்தார்.

நாட்டின் நிலக்கரி உற்பத்தி 2024-25 ஆம் ஆண்டில் ஒரு டன் அளவை முதல்முறையாக எட்டியது என குறிப்பிட்டார்.

நிலக்கரி வாயுமயமாக்கல் திட்டத்தின் கீழ் வரும் 2030ஆம் ஆண்டிற்குள் 100 மில்லியன் டன் இலக்கை எட்ட அரசு செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

***************

**அஷ்விணி வைஷ்ணவ்**

நாட்டில் 2 ஆயிரம் கிலோமீட்டர் தூர ரயில்வே பாதையில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தானியங்கி ரயில் பாதுகாப்பு கவாச் கட்டமைப்பு இணைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்து பேசிய அவர், இத்திட்டத்தின் கீழ் 40 ஆயிரம் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் இயக்குபவர்களுக்கு பயற்சி வழங்கப்பட்டதாக கூறினார்.

ரயில்களின் இயக்கம் மற்றும் பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் கவாச் திட்டம் கொண்டுவரப்பட்டதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

***************

**ராஜ்நாத்சிங்**

ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதலை எடுத்துக்காட்டும் வகையிலான ஓவியக்கண்காட்சியை புதுதில்லியில் பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் இன்று பார்வையிட்டார்.

நாடாளுமன்ற கலை விழாவின் ஒருபகுதியாக அமைக்கப்பட்ட இந்த கண்காட்சியில் ஆயுதபடை வீரர்களின், துணிச்சல், தியாகம், சேவைகள் உள்ளிட்டவை ஓவியங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

துணிச்சல்மிகு வீரர்களின் நாட்டிற்கான சேவையை அனைத்து மக்களும் அறிந்துகொள்ளும் வகையில் இக்கண்காட்சி நடைபெறுவதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

***************

**கடற்படை**

நாட்டின் கடல்சார் பாதுகாப்பை முன்னெடுத்துச்செல்லும் வகையில் MH60R ஹெலிகாப்டர் படைபிரிவின் I N S 335 இன்று கடற்படையில் இணைகிறது.

கோவாவில் உள்ள INS கடற்படை தளத்தில் கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி தலைமையில் இது இணைக்கப்படுகிறது.

கடற்படைக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில், நவீன வசதிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

***************

**உச்சிமாநாடு**

பாரம்பரிய மருத்துவம் தொடர்பான உலகளாவிய உச்சிமாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

உலக சுகாதார நிறுவனம் மற்றும் ஆயுஷ் அமைச்சகம் சார்பில் நடைபெறும் இந்த 3 நாள் நிகழ்வில் மக்களை மையப்படுத்தும்
சுகாதார நலனில் பாரம்பரிய மருத்துவ முறைகளின் பங்களிப்பு குறித்து கவனம் செலுத்தப்படுகிறது.

***************

**ஆஸ்கர்**

98ஆவது ஆஸ்கர் விருதுக்கான பட்டியலில் ஹோம் பவுண்ட் ஹிந்தி திரைப்படம் சிறந்த சர்வதேச படங்களுக்கான பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

15 திரைப்படங்கள் இப்பிரிவில் இடம்பெற்றுள்ளன.

***************

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் அலையாத்தி காடுகளின் பரப்பளவு இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்ற குழுவின் 3ஆவது கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று கூறினார்.

சுற்றுச்சூழல் தொடர்பாக பள்ளி மாணாக்கருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்று கூறிய முதலமைச்சர் 297 பசுமை பள்ளிகளில் கூல் ரூஃப் திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

**வாய்ஸ்**

முதலமைச்சர் நாளை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் 17 கோடியே 47 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொளத்தூரில் மேம்படுத்தப்பட்ட அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி மற்றும் அங்காடியை துவக்கிவைக்கிறார்.

***************

**துணை முதலமைச்சர்**

மகளிர் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தி பொருட்களின் கிறிஸ்துமஸ் புத்தாண்டு பொங்கல் விற்பனை கண்காட்சியை துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் சென்னையில் நாளை தொடங்கிவைக்கிறார்.

வரும் 4ஆம் தேதிவரை நடைபெறும் இக்கண்காட்சியில் நாட்டு சர்க்கரை, பணங்கற்கண்டு, மூலிகை பொருட்கள் உள்ளிட்ட உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யப்பட உள்ளன.

***************

**தங்கம் தென்னரசு**

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 16 சதவிகிதமாக அதிகரித்துள்ளது என மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசின் பல்வேறு நடவடிக்கைகளால் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி 30 சதவிகிதத்திற்கும் மேல் உயர்ந்துள்ளதாக குறிப்பிட்டார்.

உற்பத்தி துறையில் மாநிலம் மிகப்பெரிய முன்னேற்றம் கண்டுள்ளதாக கூறிய அவர், முதலீட்டாளர் மாநாடு மூலமாக 11 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

***************

**அன்பில் மகேஷ்**

தமிழக தொடக்க பள்ளிகளில் மாணாக்கர் இடைநிற்றல் இல்லா நிலை ஏற்பட்டுள்ளதாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டில் உயர்நிலை மேல்நிலை பள்ளிகளில் மாணாக்கர் இடைநிற்றல் 14 சதவிகிதமாக உள்ள நிலையில், தமிழகத்தில் இது 7.7 சதவிகிதமாக உள்ளதாகவும், இதனை குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

***************

**பிஜேபி கூட்டம்**

தமிழகத்தில் பிஜேபி உயர்மட்ட குழு கூட்டம் அக்கட்சியின் மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் தலைமையில் சென்னை கிண்டியில் இன்று நடைபெறுகிறது.

கட்சியின் திரு.அரவிந் மேனன், திரு.சுதாகர் ரெட்டி, திரு.அண்ணாமலை, டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

***************

**இருவரி**

**திருப்பத்தூரில் மாநில அளவிலான** சிறுபான்மையினர் தின விழா இத்துறைக்கான அமைச்சர் திரு.நாசர் தலைமையில் நாளை நடைபெறுகிறது.

***************

**தண்ணீர் திறப்பு**

முல்லை பெரியாறு அணையிலிருந்து 18ஆம் கால்வாய் நீட்டிப்பு பகுதி பாசனத்திற்காக இன்று தண்ணீர் திறக்கப்பட்டதாக எமது தேனி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

***************

**உடுமலை - ஆழியாறு**

திருப்பூர் மாவட்டம் உடுமலை திருமூர்த்தி மலை பஞ்சலிங்க அருவியில் வெள்ள பெருக்கு காரணமாக பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதேபோல் கோவை மாவட்டம் பொள்ளாச்சி ஆழியாறு கவி அருவியில் வெள்ளப்பெருக்கு காரணமாக சுற்றுலாப் பயணிகளுக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

***************

**கிரிக்கெட்**

இந்திய தென்னாப்பிரிக்க அணிகளுக்கிடையேயான 4ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி லக்னோவில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

***************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**